Enrich, XI(I): 1 - 3, July – Dec, 2019

# கலித்தொகையில் மகளிர் மாண்பு

சு.விஜயா கலைவாணி, தமிழ்த்துறை
ஏ.பி.சி.மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி

**முன்னுரை**

சங்ககால மகளிர் வாழ்க்கையை அகம், புறம் என இரு பிரிவுகளாகப் பிரித்துக் கூறுவர். அகம் என்பது, வீரத்துடன் தொடர்புடைய காதல் ஆகும். சங்ககால மக்களின் காதல் வாழ்வு வீரத்துடன் இரண்டறக் கலந்திருப்பதை சங்க இலக்கியங்கள் நமக்கு உணர்த்துகின்றன. பெண்கள் தன் கணவன் வீரம் நிறைந்தவனாக இருக்க வேண்டும் என்பதைப் பெரிதும் விரும்பினர். கலித்தொகையில் குறிப்பிடப்பட்ட மகளிரின் பண்புகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

**மகளிரின் மனையற மாண்புகள்**

சங்ககாலத்தில் மனையறம் நிகழ்த்தும் உரிமையும் இல்லறத்தின் தலைமை தாங்கி நடத்திச் செல்லும் சிறப்பும் மகளிருக்கே உரியதாகக் காணப்பட்டது.

மனைவி, இல்லாள், மனைக்கு விளக்கு, மனைக்கிழத்தி மனையாள், இற்பொலிமகடூஉ, இற்கிழத்தி என்ற பெயர்கள் மகளிருக்கே உரியனவாயின.

மனையற மகளிரின் தலையாய கடமை விருந்தோம்பல் ஆகும். இல்லம் தேடி புதிதாக வருபவரை இன்முகத்துடன் வரவேற்று இனிய மொழிகள் பேசி, உபசரித்துப் போற்றும் உயரிய பணியாக விருந்தோம்பல் கருதப்பட்டது. தலைவனுக்கு நல்லறிவு கூறுபவளாகத் தலைவி விளங்குகின்றாள்.

**வீரம் பெரிது**

முல்லை நில மக்கள் ஆடு, மாடு மேய்ப்பதைத் தங்கள் தொழிலாகக் கொண்டவர்கள். ஆநிரையினின்று பாலைப் பெற்றுத் தயிராக்கி, மோராக்கி, வெண்ணெய் எடுத்து ஊர் தோறும் விற்று வரும் தொழிலை முல்லை நில ஆயர்குல மகளிர் செய்து வருகின்றனர். அவ்வாறு மோர், பால், தயிர், வெண்ணெய் முதலியவற்றை விற்று வருகையில் ஊரான் அப்பெண்ணைச் சுட்டிக் காட்டி, இவளது கணவன் சீறிப்பாய்ந்து வரும் காளையை அடக்கிய வீரன் என்று புகழ்ந்து கூறுவார்கள்.

மோர் முதலான பொருட்களை விற்றுக் கிடைக்கும் பெரும் செல்வத்தினால் கிடைக்கும் மகிழ்ச்சியைவிடத் தன் கணவன் வீரன் என்று அயலார் கூறிய சொற்களே மிகுதியான மகிழ்வைத் தருவதாக அமையும் என்கிறாள்.

> **“கொல்லேறு கொண்டான் இவள்கேள்வன் என்றூரார்**
> **சொல்லுந் சொற் கேளா களைமாறி யாம்வருநீ**
> **செல்வமெங் கேள்வன் தருமோ வெங்கேளே”   முல்லைக் கலி. – 6 (43-45)**

ஊராரின் புகழ்ச்சி உரையினை எனைக் கேட்க விடாமல் என் தலைவன் எனை மணந்து கொண்டு மகிழ்வைத் தருவான் எனக் கூறுகிறாள்.

**முல்லை நில மகளிர் பாடவிரும்பும் மார்பு**

முல்லை நில மகளிர் பாட விரும்புகின்ற பாடு பொருளாக வீரனின் மார்பினைக் கையாளுகின்றாள். சினத்துடன் சீறிப் பாய்ந்து வரும் காளைகளின் கூரிய கொம்புகளால் காயம்பட்ட மார்பினைப் பாடுவதே சிறந்தது எனக் கருதி தம் தோழியரையும், தலைவியையும் ஒரு பெண் அழைக்கிறாள். இதனை,

> **“பாடுகம் வம்மின் பொதுவன் கொலையேற்றுக்**
> **கோடு குறிசெய்த மார்பு”   முல்லைக் கலி. – 4 (63-64)**

என்று வீரத்தழும்பு ஏற்பட்ட மார்பினைப் புகழ்ந்து பாடுவதே தமிழ் மரபு எனத் தெளிவாக உணரலாம். சீறிப்பாய்ந்து வரும் காளைகளின் கொம்புகளால் ஏற்பட்ட காயத்தினை உடைய வீரர்களின் மார்பினையே முல்லைநில ஆயர்குல மகளிர் தழுவ விரும்புவார்கள். காயம்பட்ட மார்பினைத் தழுவுவது எப்படி என்று ஒரு தோழி கேட்க, அதற்கு விடையளிக்கும் முகமாக,

**“முயங்கிப் பொதிவேம் முயங்கிப் பொதிவேம்**
**முலைவேதின் ஒற்றி முயங்கிப் பொதிவேம்**
**கொலையேறு சாடிய புண்ணையெங்கேளே” முல்லைக் கலி. – 6 (34-36)**

என்று கூறுகிறாள். முல்லை நில ஆயர்குல மகள் வீரக் காயம் பட்ட ஆடவரைத் தங்கள் மார்புகளால் ஒற்றிய பிறகு தழுவி மகிழும் ஆயர்குலப் பெண்ணின் கூற்றில் வீரம் உடைய ஆணே தன் கணவனாய் வருதல் வேண்டும் என்ற பெண்ணின் உள்ளக் கிடக்கையை வெளிப்படுத்துகிறது.

**களவு வாழ்க்கையில் தலைவியின் மாண்பு**

சங்க கால வாழ்க்கையில் களவு சிறப்பிடம் பெறுகிறது. களவு வழிப்பட்ட கற்பு மனமே பெரும்பான்மையாகச் சுட்டப்பெற்றுள்ளது. இக்களவில் தலைவனைச் சந்தித்து அவனுடன் பழகிய தலைவியின் மனநிலையை அறியாத அவளுடைய உறவினர், வேறொருவருடன் அவளுக்குத் திருமண ஏற்பாடு செய்தனர். இதனையறிந்த தலைவி, தோழியிடம் தன்னுடைய களவு வாழ்வைக் கூறி, தான் விரும்பிய தலைவனுடனே திருமணம் நிகழ உதவுமாறு நின்றாள்.

**“இன்னது செய்தாள் இவள் என**
**மன்னா உலகத்து மன்னுவது புரைமே” முல்லைக் கலி. – 6 (43-45)**

களவு வாழ்வு பொய்ப்பட்டு வேற்றுவருடன் நிகழுமாயின், காதலறம் பிழைக்குமாதலின் அதனைத் தவிர்க்கும் வகையில் தலைவி செயல்படுவாள் என்பதை மேற்கூறிய பாடலின் வழி அறிய முடிகிறது.

களவு காலத்தே களவின்பத்தையே நீடிக்க முயல்கின்றான் ஆண்மகன். வரைந்து கொள்ள வேண்டும் என்று அவன் நேராகவோ, நண்பன் மூலமாகவோ கூறியதாக எப்பாடலிலும் செய்தி இல்லை எனக்குறிப்பிடலாம். ஆண்மகன் வரைந்து கொள்ள முயலாவிடினும், அவனை மணம் செய்து கொள்வதையே தன்னுடைய நோக்கமாகக் கொண்டிருப்பாள் தலைவி.

**“இருமணம் கூடுதல் இல்இயல்பு அன்றே” (கலி. 114)**

உலகத்தையே பெறுவதாக இருந்தாலும் சிறந்த குடிப்பிறந்த மகளிர் விரும்பியவனையன்றி வேறொருவனைத் திருமணம் செய்துகொள்ள மாட்டார்கள் என்னும் கருத்தினை மேற்கூறிய பாடலின்வழி அறியமுடிகிறது.

**கற்பில் தலைவியின் மாண்பு**

தலைவன் தான் செல்லக் கருதிய காட்டின் கடுமையையும், தலைவியின் மென்மையையும் எண்ணி அவளைவிட்டுத் தான்மட்டும் பிரிந்து செல்லக் கருதினான். தலைவி தன்னையும் உடனழைத்துச் செல்லுமாறு கூறினாள்.

**“வளியினும் வரைநில்லா வாழுநாள்நும்ஆகத்து**
**அளியென உடையேன யான் அவலம் கொண்டு அழிவளே” கலி. 20 (7-10)**

இப்பாடலில், செல்லும் காட்டுவழி எளியதன்றாயினும், வரையறுத்துக் கூறவியலாத நிலையாமையை உடைய காற்றைப் போன்று விளங்குவது வாழ்நாள். இவ்வாழ்நாளில் உன்னைப் பிரிந்து இருக்கமாட்டேன். பிரிந்து இருந்தால் இறந்து விடுவேன் என்னும் தலைவியின் கூற்றின் வழித் தலைவனிடம் அவள் கொண்டிருந்த அன்பை அறிய முடிகிறது.

**கற்பு ஒழுக்க நெறி**

கற்பு என்பது உயிரினும் மேலானதாக மதித்துப் போற்றப்பட்டதொன்றாகும். கற்புடைய பெண்ணைப் பற்றி வள்ளுவர் கூறும் போது,

**"தற்காத்துத் தற்கொண்டான் பேணித்தகைசான்ற**
**சொற்காத்துச் சோர்விலாள் பெண்" (குறள் 56)**

பெண்கள் கற்பிற்கு அறிகுறியாக முல்லை மலரை அணிவது வழக்கம். நாணமும் கற்பும் பெண்களுக்குப் பேரணிகலன்களாவன.

**"நல்லவர் நுடக்கம்போல் நயம்வந்த கொடும்பொடும்" (கலி. 39-40)**
**"நகைமொழி நல்லவர் நாணும் நிலைபோல்**
**தகைகொண்ட ஏனலுள் தாழ்குரல்" (கலி. 40)**

என்ற பாடலின் மூலம், பூங்கொம்பின் தாழ்ந்து நிற்கும் தோற்றத்தையும், தினைக்கதிர் விளைந்து வளைந்து நிற்கும் கோலத்தையும் பெண்களின் நாணத்துடன் ஒப்பிடுவர். பெண் மகளிர் கற்புக்கு மழை பெய்விக்கின்ற தெய்வீக ஆற்றல் இருந்ததைக் கலித்தொகை புலப்படுத்தும்.

**"வறன்ஓடின் வையகத்து வான்தரும் கற்பினள்" கலி-16-(20)**
**"வடமீன் போல் தொழுதேத்த வயங்கி கற்பினள்" கலி-2-(21)**

மேலும் பெண்கள் தன் கற்புடைமையால், வானத்தில் விளங்கும் அருந்ததியைப் போல உலகம் தொழுகின்ற பெருமை உடையவர்களாகவும் விளங்கினர்.

**தலைவனை செலவழுங்குவித்தல்**

சங்ககாலம் முதல் இக்காலம் வரை பொருள் வாழ்வின் ஓர் அங்கமாகக் கருதப்படுகிறது. தம்மை நாடிவரும் விருந்தினர்க்கு ஈதல் பொருட்டுப் பொருளீட்டச் செல்வது தலைமகனது கடமையாகும். இவ்வாறு பொருளீட்டுவதற்காகத் தலைவியை விட்டுப் பிரிந்து செல்லக் கருதுகிறான், தலைவன்.

**"நிலைகிய கற்பினாள் நீநீப்பின் வாழாதாள்" (கலி-2)**

தலைவியை விட்டுப் பிரிந்து, தலைவன் சென்றால் அவள் உயிர் வாழமாட்டாள் என்பதைச் சுட்டித் தலைவனைத் தோழி செலவழுங்கிவித்தமையை மேற்கூறிய பாடலின் வழி அறிய முடிகிறது.

**முடிவுரை**

மக்களின் வாழ்வியலைப் படம்பிடித்துக் காட்டும் காலக் கண்ணாடிகளாக இலக்கியங்கள் விளங்குகின்றன. வாழ்வியல் செய்திகளைப் பொதிந்து வைத்திருக்கும் ஒரு கருவூலமாகக் கலித்தொகை விளங்குகிறது. மகளிரின் மாண்புகளை அழகாக எடுத்தியம்புகிறது.

**துணை நூற்பட்டியல்**

1. கலித்தொகை, முனைவர்.அ.விசுவநாதன், நியூசெஞ்சுரி புக்ஹவுஸ் (பி) லிட், 41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை – 600098.
2. திருக்குறள், திருவள்ளுவர், திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட். சென்னை – 1, 1992.